## மின்வர்த்தகத்தை அதிக உட்பட்டதாக மாற்றும் வகையில் ∴பிளிப்கார்ட் 3 புதிய பிராந்திய மொழி இடைமுகப்புகளை அறிமுகம் செய்துள்ளது

- *நுகர்வோர்களுக்கு சொந்த மொழியில் மின்-வர்த்தக அனுபவத்தை வழங்கிடும் வகையில், தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட மொழி இடைமுகப்புகளை அறிமுகம் செய்துள்ளது*
- *இந்த இந்தியாவிற்காக உருவாக்கப்பட்ட டெக் ஸ்டேக், ∴பிளிப்கார்ட் பொறியியலாளர்கள் குழுவால், உள்ளமை ரீதியில் உருவாக்கப்பட்டுள்ளது*
- *பயனர்களின் மொழித்தடைகளைக் குறைக்கும் வகையில், 5.4 மில்லியனுக்கும் மேற்பட்ட வார்த்தைகள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன*




**பெங்களூரு - ஜுன் 24, 2020:** இந்தியாவின் உள்ளூர், மின்-வர்த்தக சந்தையிடமான ∴பிளிப்கார்ட், இந்திய மொழிப்பயனர்களுக்கு ஆன்லைன் வர்த்தகத்தை அதிகம் உள்ளடங்கியதாகவும் மற்றும் அணுகத்தக்கதாகவும் மாற்றும் அதன் இலங்கின் ஒரு பகுதியாக, இன்று அதன் அடித்தளத்தில் - தமிழ், தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய மூன்று புதிய மொழிகளை ஏதுவாக்கியுள்ளது. இந்த அறிமுகம், உள்ளும் மொழி பேசுபவர்களுக்கு, மின்-வர்த்தகத்திற்கான அணுகல் தடையைக் குறைக்க உதவும். கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஹிந்தி இடைமுகப்பைத் தொடர்ந்து, வாடிக்கையாளர்கள் அவர்களது முழுமையான மின்வர்த்தகப் பயணத்தை, சொந்த மொழியில், சுலபமாக மேற்கொள்ளும் திறனைப் பெறும் வகையில், ∴பிளிப்கார்ட்டின் “லோக்கலைசேஷன் மற்றும் டிரான்ஸ்லேஷன் அடித்தளத்தின்” மீது கட்டமைக்கப்பட்ட புதிய பிராந்திய மொழிகள் இடைமுகப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மின்-வர்த்தகத்திற்கு மாறும் நுகர்வோர்கள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்களை ஈடேற்றும் வகையிலான நவீன புத்தாக்கங்களை உருவாக்கும் ∴பிளிப்கார்ட்டின் இலக்கினையொட்டி, இப்புதிய 3 பிராந்திய மொழி இடைமுகப்புகளின் அறிமுகங்கள் அமைந்துள்ளன. தொழில்துறை ஆய்வுகளின் படி*, 2021 – ம் ஆண்டு வாக்கில், இந்தியாவின் ஒட்டுமொத்த இணைய பயனர் அடித்தளத்தில், ஏறக்குறைய 75% பேர் இந்திய மொழி இணையப் பயனர்களாக இருப்பர் என தெரியவந்துள்ளது.

இந்த வளர்ந்து வரும் மொழிப்பயணர்கள் அடித்தளம், முதன்மையாக சிறு நகரங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களுக்கு அதிகம் தனிப்பட்ட அனுபவத்தை வழங்கி, பிராந்திய மொழிகளில், மின்-வர்த்தகத்தை ஏதுவாக்குவது மிகவும் முக்கியமானதாகிறது. இது மேலும், நாட்டிலுள்ள பல மில்லியன் நுகர்வோர்கள், அவர்தம் சொந்த மொழிகளில் ஒரு இடையீடு மிக்க ஆன்லைன் ஷாப்பிங் அனுபவத்தை

மேற்கொள்வதை சாத்தியமாக்கும். ஃபிளிப்கார்ட்டின் வளர்ந்து வரும் பயனர்கள் அடித்தளத்தில் தென்னிந்திய மாநிலங்கள் ஒரு குறிப்பிடத்தக்க அளவைக் கொண்டுள்ள நிலையில், உள்ளூர் மொழி எழுத்துகள், பிராந்திய மொழி இடைமுகப்புகள், மின்-வர்த்தகதை அதிகம் உள்ளடங்கியதாக மாற்ற பெரிதும் உதவும்.

**பயனர் ஆய்வு**

இப்புதிய மொழி இடைமுகப்புகள், மொழிபெயர்க்கப்பட்ட மற்றும் எழுத்துப்பெயர்க்கப்பட்ட வார்த்தைகளைக் கொண்டுள்ளது, நுகர்வோர்களுக்கு ஷாப்பிங்கை அதிகம் இடையீடுமிக்கதாக மாற்றுகிறது. இதைத் தொடர்ந்து பல மாதங்கள் மேற்கொள்ளப்பட்டதொரு மக்களியல் ஆய்வில், நுகர்வோர் தங்களது சொந்த மொழியில் அடித்தளத்துடன் இடையீடு மேற்கொள்ள விரும்புவதையும் மற்றும் வாங்குதல் முடிவுகளை மேற்கொள்ள அவர்களது சார்பற்ற தன்மையை ஊக்குவிக்கும் வகையில், பல உள்ளார்ந்த விஷயங்கள் தெரியவந்தன.

இந்த மக்களில் ஆய்வில், சேலம், விசாகப்பட்டிணம் மற்றும் மைசூரு உள்ளிட்ட நகரங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்களுடன் சந்திப்புகள் நடத்தப்பட்டன மற்றும் இப்பிராந்தியங்களின் நுகர்வொர்களின் மாறுபட்ட மொழி நடத்தைகள் குறித்த விபரங்களும் மற்றும் அமல்படுத்தத்தக்க பல்வேறு பிற ஆர்வமூட்டும் விஷயங்களும் தெரியவந்தன. இதில், விபரக்குறிப்புகள், பேனர்கள் மற்றும் பேமெண்ட் பக்கங்கள், இன்ன பிற., உட்பட்ட பல்வேறு பக்கங்களுக்காக 5.4 மில்லியனுக்கும் மேற்பட்ட வார்த்தைகள் பெரிய-அளவில் மொழிபெயர்க்கப்பட்டன.

**ஃபிளிப்கார்ட் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கல்யாண் கிருஷ்ணமூர்த்தி** அவர்கள், *“கடந்த ஆண்டில், மில்லியன் கணக்கான நுகர்வோருக்கு இணையவழி அமலாக்கத்தை அதிகரிக்க குரல், வீடியோ மற்றும் வெர்னாகுலர் ஆகியவற்றின் கீழ் பல தீர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மொழிசார்ந்து, நன்கு தீர்க்கப்பட்டால், மதிப்புள்ள மில்லியன் கணக்கான நுகர்வோரை அடைய அது ஒரு தடையாக இல்லாமல் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நாங்கள் உண்மையாகவே நம்புகிறோம். ஒரு உள்நாட்டு மின்-வர்த்தகச் சந்தையாக, நாங்கள் இந்தியாவையும் அதன் பன்முகத்தன்மையையும் மிகவும் நுணுக்கமான முறையில் புரிந்துகொண்டு, நீண்டகால மாற்றத்தைக் கொண்டுவரும் ஆற்றலைக் கொண்ட தயாரிப்புகளை உருவாக்குகிறோம். இந்தி மற்றும் ஆங்கிலம் தவிர, தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட இடைமுகப்புகளின் அறிமுகம், இந்தியாவில் மின்வணிகத்தை ஜனநாயகமயமாக்குவதற்கான எங்கள் பணிக்கு ஏற்ப, மேற்கொள்ளப்படும் பயணத்தின், ஒரு அர்த்தமுள்ள படியாகும்”* என்று கூறினார்.

**ஃபிளிப்கார்ட்டின் தலைமை தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப அலுவலர் ஜெயந்திரன் வேணுகோபால்** அவர்கள், *“ஒரு உள்நாட்டு மின்-வர்த்தகச் சந்தையாக, பிளிப்கார்ட் நமது பாரத் பயனர்களை மேம்படுத்துவதற்கும், புதிய ஆன்லைன் பயனர்களை மின்வணிகத்திற்கு எளிதாக மாறுவதை உறுதி செய்வதற்கும் வடமொழி இடைமுகப்புகளின் விரிவாக்கப்பட்ட உலகைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளது.*

*இன்று, எங்கள் பயனர் தளத்தின் கிட்டத்தட்ட 58% இரண்டாம் நிலை நகரங்களிலிருந்தும் அதற்கு அப்பாலும் உள்ளனர் மற்றும் மேலும் தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளின் புதிய மொழி இடைமுகப்பகளுடன், இந்தியும் (கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது) இணைந்து பயனர்களின் இணையவழி பயணங்களை எளிமையானதாகவும், தனிப்பட்டதாகவும் மாற்றுவதன் மூலம் மேலும் மேம்படுத்தும்."* என்று கூறினார்.

ஃபிளிப்கார்ட்டில் உள்ள இந்த மூன்று புதிய மொழி இடைமுகப்புகள், 9 மாதங்களுக்கு முன்பு இந்தி இடைமுகப்பு அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின்னர் உருவாக்கப்பட்டுள்ளன மற்றும் அது ஒரு அற்புதமான அமலாக்கத்தைக் கண்டது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு மொழிக்கும் அதன் சொந்த நுணுக்கமான பண்புகளைக் கொண்டிருப்பதால், ஃபிளிப்கார்ட்டின் பொறியாளர்கள் குழு UI மற்றும் இயங்குதள கட்டமைப்பின் அடிப்படையில் பல தொழில்நுட்ப சவால்களை இதற்காக எதிர்கொண்டது.

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து:**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். 2007 – ம் ஆண்டு, பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் வழங்கி வருகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:** media@flipkart.com

*KPMG-கூகுள் இந்திய மொழிகள் - டிஃபைனிங் இந்தியாஸ் இண்டர்நெட் அறிக்கை